# 06-11-2024 செய்தி

## கிராம வங்கிகளை மீண்டும் ஒருங்கிணைக்க நிதியமைச்சகம் நடவடிக்கை

- மண்டல கிராம வங்கிகளை 4-ஆவது கட்டமாக ஒருங்கிணைக்கும் நடவடிக்கையை மத்திய நிதியமைச்சகம் தொடங்கியுள்ளது.
- இப்போது நாடு முழுவதும் 43 மண்டல கிராம வங்கிகள் உள்ள நிலையில் இவை 28 வங்கிகளாக ஒருங்கிணைக்கப்பட இருக்கின்றன.
- இதன் மூலம் வங்கிகளின் செயல்பாடுகள் சிறப்பாக இருப்பதுடன், செலவும் கணிசமாகக் குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- இப்போதைய நிலையில் ஆந்திரத்தில் அதிகபட்சமாக 4 மண்டல கிராம வங்கிகள் உள்ளன. இதற்கு அடுத்து உத்தர பிரதேசம், மேற்கு வங்கம் ஆகியவற்றில் தலா 3, பீகார், குஜராத், ஜம்மு-காஷ்மீர், கர்நாடகம், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம், ஒடிஸா, ராஜஸ்தானில் தலா இரு மண்டல கிராம வங்ககிகள் உள்ளன.
- தேசிய வேளாண்மை, கிராம வளர்ச்சி வங்கியுடன் (நபார்டு) ஆலோசித்து இந்த மண்டல கிராம வங்கிகளை ஒருங்கிணைக்க நிதியமைச்சகம் திட்டம் வகுத்துள்ளது.
- முன்னதாக, கடந்த 2004-05 -ஆம் ஆண்டில் நாடு முழுவதும் 196 மண்டல கிராம வங்கிகள் செயல்பட்டு வந்தன.
- 2020-21 - ஆம் ஆண்டு வரை மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்குப் பிறகு 196 வங்கிகள் 43 வங்கிகளாகக் குறைக்கப்பட்டன.
- மண்டல கிராம வங்கிகள் சட்டம் 1976-இன் கீழ் இந்த வங்கிகள் உருவாக்கப்பட்டன.
- கிராமப்பகுதிகளில் சிறு விவசாயிகள், வேளாண் தொழிலாளர்கள், கைவினைக் கலைஞர்களுக்கு கடன் மற்றும் பிற வங்கிச் சேவைகளை அளிப்பதே இந்த வங்கியின் நோக்கமாகும்.
- இந்த வங்கியின் நிதியில் 50 சதவீதம் மத்திய அரசுடையதாகும். 35 சதவீதம் பொதுத் துறை வங்கிகளின் நிதியாகவும், 15 சதவீதம் வங்கி செயல்படும் மாநில அரசின் நிதியாகவும் உள்ளது.
- தமிழ்நாட்டில் பாண்டியன் கிராம வங்கி, பல்லவன் கிராம வங்கி, பல்லவன் கிராம வங்கி என செயல்பட்டு வந்த மண்டல கிராம வங்கிகள், 2019-ஆம் ஆண்டு ஒருங்கிணைக்கப்பட்டு தமிழ்நாடு கிராம வங்கியாக செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## அனைத்து தனியார் சொத்துகளையும் அரசு கையகப்படுத்த முடியாது: உச்சநீதிமன்றம்

- 'பொதுநல பயன்பாட்டுக்கு என்ற பெயரில் அனைத்து தனியார் சொத்துகளையும் கையகப்படுத்தும் அதிகாரம் மாநிலங்களுக்கு இல்லை' என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- இருந்தபோதும், 'ஒருசில பொதுத் திட்டங்களுக்கு மட்டும் தனியார் சொத்துகளை மாநிலங்கள் கையகப்படுத்த முடியும்' என்றும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான 9 நீதிபதிகள் அமர்வு தீர்ப்பளித்தது.
- பொதுநல பயன்பாட்டுக்காக தனியாருக்குச் சொந்தமான சொத்துகள் உள்ளிட்ட சமூக வளங்களை மாநில அரசு தன்வசம் எடுத்துக்கொள்ள அரசமைப்புச் சட்டப்பிரிவுகள் 39(பி) மற்றும் (சி) ஆகியவை அதிகாரமளிக்கின்றன. அந்த அதிகாரத்தின் கீழ் மகாராஷ்டிரா வீட்டு வசதி மற்றும் நகர மேம்பாட்டு ஆணைய (எம்ஹெச்எடிஏ) சட்டத்தை இயற்றிய மகாராஷ்டிரா அரசு, அந்தச் சட்டத்தில் கடந்த 1986-ஆம் ஆண்டு '8-ஏ' என்ற பிரிவை இணைத்தது.
- அதாவது, தனியாருக்குச் சொந்தமான அடுக்குமாடி கட்டடத்தில் 70 சதவீத குடியிருப்புகளில் மக்கள் குடியேறிவிட்ட போதும், அந்த கட்டடம் அமைந்துள்ள நிலத்தை மாநில அரசு கையகப்படுத்த '8-ஏ' பிரிவு அதிகாரமளிக்கிறது.
- இதை எதிர்த்து மும்பையைச் சேர்ந்த நில உரிமையாளர்கள் சங்கம் உள்பட பல்வேறு தரப்பினர் சார்பில் 16 மனுக்கள் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுக்களை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான 9 நீதிபதிகள் அமர்வு விசாரித்து வந்தது.

**இரு மாறுபட்ட தீர்ப்பு:**

- இந்த வழக்கில், 7 நீதிபதிகள் ஒருமித்த தீர்ப்பையும், இரு நீதிபதிகள் எதிரான தீர்ப்பையும் அளித்தனர்.
- 'பொதுநல பயன்பாட்டுக்காக அனைத்து தனியார் சொத்துகளையும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 39(பி) -இன் கீழ் மாநிலங்களே கையகப்படுத்த முடியும்' என்ற நீதிபதி கிருஷ்ண ஐயரின் முந்தைய தீர்ப்பை தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான பெரும்பான்மை நீதிபதிகள் மாற்றி எழுதினர்.
- அதாவது, 'பொதுநல பயன்பாட்டுக்கு என்ற பெயரில் அனைத்து தனியார் சொந்தங்களையும் கையகப்படுத்தும் அதிகாரம் மாநிலங்களுக்கு இல்லை. அதே நேரம், ஒருசில பொதுத் திட்டங்களுக்கு மட்டும் தனியார் சொத்துகளை மாநிலங்கள் கையகப்படுத்த முடியம்' என்று தங்களின் தீர்ப்பில் அவர்கள் தெரிவித்தனர்.
- இதற்கு, அந்த அமர்வில் இடம்பெற்ற நீதிபதி பி.வி.நாகரத்னா பகுதியாகவும், நீதிபதி சுதான்சு துலியா முழுமையாகவும், எதிர்ப்பு தெரிவித்தனர். இருந்தபோதும், பெரும்பான்மை தீர்ப்பின் அடிப்படையில், அனைத்து தனியார் சொத்துகளையும் மாநில அரசுகள் கையகப்படுத்த முடியாது என்பது உறுதி செய்யப்பட்டது.

# அதிகரிக்கும் விலைவாசி

- ஒரு குடும்பத்துக்குத் தேவையான ஊட்டச்சத்துள்ள உணவின் விலையானது, வருமானத்தைவிட அதிகமாக உயர்ந்துவருகிறது.
- 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024இல் ஒரு தனிநபரின் வருமானத்தில் பெரும் பங்கு உணவுக்காகவே செலவிடப்படுகிறது.
- 2023 அக்டோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில், 2024 அக்டோபரில் உணவுப் பொருள்களின் விலை 52% அதிகரித்துள்ளது. ஆனால், ஒருவரின் சராசரி சம்பளம் 9 முதல் 10% வரை மட்டுமே அதிகரித்துள்ளதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

**அதிகரிக்கும் விலை**

- காய்கறிகளின் விலை உயர்ந்துகொண்டே செல்வது, உணவுக்கன செலவு அதிகரிப்பதற்கு நேரடிக் காரணமாகிறது. சராசரியாக அரிசி, பருப்பு, காய்கறிகள் அடங்கிய ஒரு சரிவிகித உணவின் விலையானது ஒரே ஆண்டில் 89% அளவு அதிகரித்துள்ளது. அதே நேரத்தில், இறைச்சி உணவின் விலை 1.5% மட்டுமே அதிகரித்துள்ளது.

**வருமானம்**

- வீட்டில் தயாரிக்கும் உணவுக்கான செலவு 65% அதிகரித்திருக்கிறது. ஆனால், ஊதியம் வெறும் 28% -37% அளவில்தான் உயர்ந்திருக்கிறது.

**குழந்தைகள்–பெண்கள்**

- விலைவாசி உயர்வினால், பெண்களும் குழந்தைகளுமே அதிகப் பாதிப்பை எதிர்கொள்கின்றனர். பணவீக்கம் அதிகரிப்பதால், ஒடிஷா போன்ற மாநிலங்களில் அரசுப் பள்ளிகளின் மதிய உணவுத் திட்டமானது பாதிப்பைச் சந்தித்துள்ளது.

**உணவு உற்பத்தியில் சுணக்க நிலை**

- காலநிலை மாற்றத்தினால் மழை, வெள்ளம், வெப்ப அலை போன்ற கணிக்க முடியாத வானிலை நிகழ்வுகள் தொடர்ந்துவருவதால், பெரும்பாலான உலக நாடுகளில் உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது; இதன் காரணமாக ஆப்ரிக்க, தெற்காசிய, மேற்காசிய நாடுகளில் விலைவாசி கடுமையாக அதிகரித்திருப்பதாக ஐ.நா. அவை கூறுகிறது.
- உலக நாடுகளில் நிலவும் நேரடிமறைமுகப் போர்ச்சூழல் காரணமாகவும் உணவுப் பொருள் இறக்குமதியில் சுணக்க நிலை நிலவுவதாக அரசியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

**திட்டமிடல் அவசியம்**

- எதிர்கால உணவுப் பொருள்களின் இருப்பு எல்நினோ போன்ற காலநிலை நிகழ்வுகளைச் சார்ந்தே இருக்கும் எனச் சுற்றுச்சூழல் செயல்பாட்டாளர்கள் கணிக்கின்றனர்.
- இதைக் கவனத்தில் கொண்டு உணவுப் பொருள்களின் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளையும், விலையேற்றத்தைக் குறைப்பதற்கான ஆக்கபூர்வமான திட்டமிடல்களையும் மத்திய அரசு வகுக்க வேண்டும்.
- முதற்கட்டமாக அரிசி, கோதுமை, சர்க்கரை, வெங்காயம் போன்றவற்றின் ஏற்றுமதிகளைக் கட்டுப்படுத்தி, இறக்குமதி உணவுப் பொருட்களில் சில தளவுர்களை நடைமுறைப்படுத்தலாம்.
- இதன் மூலம் பணவீக்கம், விலைவாசி உயர்வை ஓரளவாவது கட்டுக்குள் வைக்க முடியும்.

# COP-16 இலிருந்து எடுக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் யாவை?

- கொலம்பியா நாட்டின் கேலி நகரில் நடைபெற்ற 16வது உயிரினப்பன்மை மாநாடு (CBD) நிறைவடைந்தது.
- இந்த மாநாடு 2020இல் கனடாவின் மான்ட்ரியலில் நடந்த கூட்டத்தைத் தொடர்ந்து நடைபெற்றது. அக்கூட்டத்தில் நாடுகள் 2030க்குள் நிலம் மற்றும் நீரை 30% பாதுகாக்க ஒப்புக்கொண்டன. இது 30-by-30 ஒப்பந்தம் என அழைக்கப்படுகிறது.
- 2030க்குள் வேற்றின சிற்றினங்கள் அறிமுகம் செய்யும் அளவை 50% குறைக்கவும், அவற்றின் தாக்கத்தைக் குறைக்கவும் நோக்கமாகக் கொண்டது. மேலும் இது 2030-ஆம் ஆண்டளவில் அனைத்து மூலங்களிலிருந்தும் மாசுபாட்டின் எதிர்மறையான தாக்கத்தையும் தாங்கக்கூடிய அளவிற்கு மாசு அபாயங்களை குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- COP -16 மாநாட்டின் முக்கிய நோக்கம், அதன் இலக்குகளை அடைய நடைமுறைகள் மற்றும் செயல்பாட்டுத்திட்டங்களை ஒப்புக்கொள்வதுடன், அதற்கான நிதியை ஒழுங்கமைப்பதற்கான வழிகளைப் பற்றி விவாதிப்பதும் ஆகும்.
- இந்தியா, புதுப்பிக்கப்பட்ட உயிரினப் பன்மை திட்டத்தை வெளியிட்டு, 2025-2030 (நிதி ஆண்டு) காலகட்டத்தில் உயிரினப் பன்மை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு சுமார் 81.664 கோடி செலவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று குறிப்பிட்டுள்ளது.
- உலகின் ஏழு முக்கிய பெரிய பூனை இனங்களைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட சர்வதேச பெரும்பூனை கூட்டமைப்பு (International Big cat Alliance) என்ற அமைப்பை நிறுவியதன் மூலம், உலக விலங்கினப் பாதுகாப்பில் எடுத்துள்ள முக்கியமான முன்னேற்றமாக இந்தியா இதனை சுட்டிக்காட்டியுள்ளது.
- இந்தப் பெரும் பூனைகளின் கூட்டமைவு ஆரோக்கியமான சூழலியல் மண்டலமும் வளமான உயிரினப்பன்மையும் கொண்டவற்றின் அடையாளமாகக் கருதப்படுகிறது.
- மேலும் ராம்சார் மாநாட்டின் கீழ் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலப்பகுதிகள் என்று குறிப்பிடப்படும் ராம்சார் தளங்கள் 2014ல் இருந்த 26ல் இருந்து 85 ஆக உயர்த்தப்பட்டுள்ளன. விரைவில் இந்த எண்ணிக்கை 100 ஆக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

SURESH